# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2039/7 - 2017 ඔක්තෝබර් මස 03 වැනි අඟහරුවාදා - 2017.10.03

*2039/7 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 03 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I)- பொது

### *அரசாங்க அறிவித்தல்கள்*

*ச.வ.பி. 94/47* (V)

**(269ஆம் அத்தியாயமான) நாடு, நகரத் திட்டமிடல் கட்டளைச்சட்டம்**

*6(2)(ஆ) மற்றும் 21(2)(ஆ) என்னும் பிரிவுகளின் கீழான கட்டளை*

(269 ஆம் அத்தியாயமான) நாடு, நகரத் திட்டமிடல் கட்டளைச்சட்டத்தின் 6(2)(ஆ) என்னும் பிரிவினாலும், 21(2)(ஆ) என்னும் பிரிவினாலும் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, பெருநகரம் மற்றும் மேற்கு அபிவிருத்தி அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க ஆகிய நான், இக்கட்டளை மூலம்:-

(அ) இதற்கான அட்டவணையிற் குறித்துரைக்கப்பட்ட "கனேமுல்ல திப்பொட்டுகொட புராண ஸ்ரீ சுகதாராம ரஜ மஹாவிகாரை புனித இடப்பரப்பு" எனவழைக்கப்பட்ட காணி இடப்பரப்பு, மேற்கூறப்பட்ட கட்டளைச்சட்டத்தின் நோக்கத்துக்காக நகர அபிவிருத்தி இடப்பரப்பொன்றாக இருத்தல் வேண்டுமென வெளிப்படுத்துகின்றேன்; அத்துடன்

(ஆ) "கனேமுல்ல திப்பொட்டுகொட புராண ஸ்ரீ சுகதாராம ரஜ மஹாவிகாரை புனித இடப்பரப்பாக" வெளிப்படுத்தப்பட்ட நகர அபிவிருத்தி இடப்பரப்புக்காக உருவரைப் பௌதீக வரைபடமொன்று தயாரிக்கப்படுதல் வேண்டுமெனப் பணிக்கின்றேன்.

பாட்டலி சம்பிக்க ரணவக்க,
பெருநகரம் மற்றும் மேற்கு
அபிவிருத்தி அமைச்சர்.

கொழும்பு,
2017, செத்தெம்பர் 27.



*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**அட்டவணை**

கனேமுல்ல திப்பொட்டுகொட புராண ஸ்ரீ சுகதாராம ரஜ மஹாவிகாரை புனித இடப்பரப்பைக் கொண்டுள்ள காணி இடப்பரப்பு

மேல் மாகாணத்தில் கம்பஹா மாவட்டத்தில் கம்பஹாப் பிரதேச செயலாளர் பிரிவில் ராகம்பத்துவின் சிறு பிரிவினுள் திம்பொட்டு கொடக் கிராமத்தில் அமைந்துள்ளவையும், 2013, ஏப்பிறல் 1ஆந் தேதிய கம்/கம்/2012/347 ஆம் இலக்க கம்பஹா மாவட்டச் சிரேட்ட நில அளவைகள் கண்காணிப்பாளரின் சுவடியெடுப்பின் மூலம் காட்டப்பட்டவையும், பரப்பளவில் 0.3979 ஹெக்டயார்களைக் கொண்டவையுமான காணி இடப்பரப்புகளும், அவற்றின் எல்லைகளும் பின்வருமாறு:-

வடக்கில் : எஸ். நந்தசேனவினால் உரிமைகோரப்பட்ட கொடல்லவத்த என்ற காணி, எஸ். விஜேபால சில்வாவினால் உரிமைகோரப்பட்ட கொடல்லவத்த என்ற காணி, பீ. தேவபிரியவினால் உரிமைகோரப்பட்ட நாகஹாவத்த என்ற காணி, கே. டீ. சந்தியாவினால் உரிமைகோரப்பட்ட நாகஹாவத்த என்ற காணி, உரிமைக்கோரிக்கையாளர் யாரென அறியப்படாத நாகஹாவத்த என்ற காணி, யூ. டீ. ஆர். மல்காந்தி மற்றும் ஏ. அபேரத்ன என்போரினால் உரிமைகோரப்பட்ட நாகஹாவத்த என்ற காணி;

கிழக்கில் : பீ. தேவபிரியவினால் உரிமைகோரப்பட்ட நாகஹாவத்த என்ற காணி, கே. டீ. சந்தியாவினால் உரிமைகோரப்பட்ட நாகஹாவத்த என்ற காணி, உரிமைக்கோரிக்கையாளர் யாரென அறியப்படாத நாகஹவத்த என்ற காணி, யூ. டீ. ஆர். மல்காந்தியினால் உரிமைகோரப்பட்ட நாகஹாவத்த என்ற காணி, ஏ. அபேரத்னவினால் உரிமைகோரப்பட்ட நாகஹாவத்த என்ற காணி, எஸ். ரத்நாயக்கவினால் உரிமைகோரப்பட்ட நாகஹாவத்த என்ற காணி மற்றும் விஹார மாவத்தை;

தெற்கில் : எஸ். ரத்நாயக்கவினால் உரிமைகோரப்பட்ட நாகஹாவத்த என்ற காணி, விஹார மாவத்தை மற்றும் எச். குலசேக்கர மற்றும் ஆர். சீ. மாலனி என்போரினால் உரிமைகோரப்பட்ட கொடல்லவத்த என்ற காணி;

மேற்கில் : எச். குலசேகர மற்றும் ஆர். சீ. மாலனி என்போரினால் உரிமைகோரப்பட்ட கொடல்லவத்த என்ற காணி, எஸ் நந்தசேன மற்றும் எஸ். விஜேபால சில்வா என்போரினால் உரிமைகோரப்பட்ட கொடல்லவத்த என்ற காணி.

*10 - 549*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.